# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2144/47 - 2019 ඔක්තෝබර් මස 10 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.10.10

*2144/47 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 10 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1955 ஆம் ஆண்டின் வான் போக்குவரத்து வழிகாட்டுகை ஒழுங்குவிதி**

*126 ஆம் ஒழுங்குவிதிகளுக்குக் கீழான அறிவித்தல்*

**பிராந்திய வர்த்தக வான் பறத்தல் செயற்பாடுகளுக்காக உள்நாட்டு விமான நிலையங்களை ஆரம்பித்தல்**

பிராந்திய வர்த்தக விமானப் போக்குவரத்துச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக உள்நாட்டு விமான நிலையங்களை ஆரம்பிப்பது தொடர்பில் அரசாங்கத்தினால் எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்திற்கு அமைய கீழ்க்குறிப்பிடப்பட்ட பணிப்புரைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு பிராந்திய வர்த்தக விமான போக்குவரத்தினை அமுல்படுத்துவதற்காக கீழ்க்குறிப்பிட்ட விமான நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

| *விமான நிலையங்களின் பெயர்கள்* | *விமான நிலையங்களின் அமைவிடம்* | | | |
|---|---|---|---|---|
| | *கிராமசேவை அலுவலர் பிரிவு* | *பிரதேச செயலக அலுவலகம்* | *மாவட்டம்* | *மாகாணம்* |
| மட்டக்களப்பு விமான நிலையம்<br>அமைவிடத்தின் சுட்டி VCCB<br>விமான நிலைய அடையாளக் குறியீடு : BTC | புதுநகர் | மண்முனை வடக்கு | மட்டக்களப்பு | கிழக்கு மாகாணம் |
| யாழ்ப்பாண விமான நிலையம்<br>அமைவிடத்தின் சுட்டி : VCCJ<br>விமான நிலைய அடையாளக் குறியீடு : JAF | மயிலிட்டி வடக்கு<br>மயிலிட்டி தெற்கு<br>குரும்பசிட்டி<br>பலாலி வடக்கு<br>பலாலி தெற்கு | வலிகாமம் வடக்கு | யாழ்ப்பாணம் | வட மாகாணம் |


1A - G 31229 — 67 (2019/10)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

*(தொடர்ச்சி)*

| *விமான நிலையங்களின் பெயர்கள்* | *விமான நிலையங்களின் அமைவிடம்* | | | |
|---|---|---|---|---|
| | *கிராமசேவை அலுவலர் பிரிவு* | *பிரதேச செயலக அலுவலகம்* | *மாவட்டம்* | *மாகாணம்* |
| இரத்மலானை விமான நிலையம்<br>*அமைவிடத்தின் சுட்டி* : VCCC<br>*விமான நிலைய அடையாள குறியீடு* : RML | கந்தவல | இரத்மலானை | கொழும்பு | மேல் மாகாணம் |

2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சிவில் விமான சேவைகள் சட்டத்தின் 31 ஆம் பிரிவின் (அ), (ஆ), (இ), (ஈ), (உ), (ஊ), (ஓ) மற்றும் (ஐ) ஆகிய பிரிவுகளின் கீழ் குறிப்பிடப்பட்டவை ஊடாக மேற்கூறப்பட்ட விமான நிலையங்கள் ஊடாக விமானப் போக்குவரத்துச் சேவைகளை வழங்குவதற்காக வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவை (இலங்கை) கம்பனி, சேவை வழங்குனராக நியமிக்கப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட விமான நிலையங்கள், அதன் வசதிகள் மற்றும் சேவைக்காலத்தை உள்ளடக்கிய விமான நிலையங்களின் சேவைகள் தொடர்பான முழுமையான பௌதீக இயல்புகள் உள்ளடங்கிய தகவல்கள் இலங்கை சிவில் விமானச் சேவை அதிகார சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளமான (www.caa.lk) இல் வெளியிடப்பட்டுள்ள வானியல் சார்ந்த பிரசுரத்தில் (AIP) வழங்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு வருகை தரும் அல்லது வெளிநாட்டு பயணக் கேந்திர நிலையங்களுக்கு புறப்பட்டுச் செல்லும் விமானங்களுக்கு மேற்கூறப்பட்ட விமான நிலையங்களில் முதலில் தரையிறக்க அல்லது இறுதியாக அதில் இருந்து புறப்பட்டுச் செல்வதற்கு அனுமதி வழங்கப்படுவதுடன், அவ்விமானங்களினால் விமான நிலையத்தில் விமானப் பயணங்களுக்காக பயணிகள், பிரயாணப் பொதி, பொருட்கள் மற்றும் தபால் உரியவாறு தரையிறக்க அல்லது ஏற்ற முடிகின்றது.

இதற்கமைய மேற்கூறப்பட்ட விமான நிலையங்களில் இருந்து தரையிறங்கும் மற்றும் புறப்பட்டுச் செல்லும் அனைத்து விமானங்களும் வானியல் சார்ந்த பிரசுரத்தில் வெளியிடப்பட்டுள்ள எல்லைக் கட்டுப்பாடு மற்றும் பிரவேசித்தல் மற்றும் புறப்பட்டுச் செல்லும் விமானங்கள் தொடர்பில் தாபிக்கப்பட்டுள்ள இயக்கவியல் செயற்பாடுகளுக்கு உரியதான தேசிய சட்டங்கள், ஒழுங்குவிதிகள், நெறிகள் மற்றும் அமுல்படுத்தும் தரங்களுக்கு அமைய செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் அவைகள் பின்பற்றப்படல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட விமான நிலையங்களுக்கு உட்செல்லும் மற்றும் அதற்கு வெளியேறிச் செல்லும் பிரயாணிகளுக்கு உரித்தான தேசிய சட்டங்கள், ஒழுங்குகள், விதிமுறைகள் மற்றும் அமுல்படுத்தும் தரங்களுக்கு தனிநபர்கள் மற்றும் பயணப் பொதி உட்பட பிரவேசித்தல் தொடர்பில் தாபிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள், செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகளுக்கு அமைய செயற்பட வேண்டியதுடன் அச்செயற்பாடுகள் தொடர்பில் சுங்க, குடிவரவு மற்றும் குடியகல்வு, விமானச் சேவைப் பாதுகாப்பு, பொது மக்கள் சுகாதாரம், செடி கொடிகள், மிருகங்கள் மற்றும் போதைப் பொருள் கட்டுப்பாடு போன்றவற்றிகுப் பொறுப்பாகச் செயற்படும் உரிய அரசாங்கத்தின் பொறுப்பாளர்களினால் பரிசோதனை செயற்பாடுகளுக்கு உட்படுத்தப்படலாம்.

மேற்கூறப்பட்ட விமான நிலையங்களில் தபால் மற்றும் ஏனைய ஆவணங்கள் உட்பட அனைத்து உள்ளக அல்லது வெளியே கொண்டு செல்லும் பொருட்கள், உரித்தான தேசிய சட்டம், கோவைகள், விதிகள் மற்றும் அமுல்படுத்தும் தரங்களுக்கு உட்பட்ட பொருட்கள், தபால் மற்றும் ஏனைய பொருட்களை உள்ளடக்குதல் மற்றும் வெளிப்படுத்துவது தொடர்பில் தாபிக்கப்பட்டுள்ள செயற்பாட்டு ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் அவ்வாறான பொருட்கள், தபால் மற்றும் ஏனைய ஆவணங்கள் உரிய சுங்க, விமானச் சேவைப் பாதுகாப்பு, பொது சுகாதாரம், செடி கொடிகள், மிருகங்கள் மற்றும் போதைப் பொருள் கட்டுப்பாடு போன்றன உரிய செயற்பாடுகளை உள்ளடக்கிய வானியல் சார்ந்த பிரசுரத்திற்கு அமைய பொருத்தமான அரச பொறுப்பாளர்களினால் மேற்கொள்ளப்படவுள்ளது.

மேற்கூறப்பட்ட விமான நிலையங்களின் பாதுகாப்புக் கட்டுப்பாடு வரையறுக்கப்பட்ட பகுதிகளில் தனி நபரோ அல்லது வாகனமோ விமான நிலைய இயக்குநரால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் நுழைவு அனுமதிப்பத்திரத்தைக் கொண்டிருப்பதுடன், பரிசோதனைக்கு உட்படுத்தும்போது காட்சிப்படுத்தக்கூடிய வகையில் அமைய வேண்டும். மேற்கூறிய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யப்படாதவிடத்து தனி நபரோ அல்லது வாகனமோ உட்செல்ல அனுமதிக்கப்பட மாட்டாது. செல்லுபடியாகும் பயண ஆவணங்கள் மற்றும் விமான பிரவேச அனுமதிப்பத்திரம் கொண்ட பயணி, அவ்விமான நிலையத்திலிருந்து புறப்படும் விமானப் பயணத்திற்காக மேற்கூறப்பட்ட கட்டுப்பாடுகளும் தடைகளும் அமுலில் இருக்காது.

விமான நிலைய பிரதேசத்திற்குள் மற்றும் அதனைச் சூழ "டுரோன்" உட்பட ஆளில்லா விமானம் பயணிப்பது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

எச். எம். நிமல்சிரி,
சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகம்.

*10-902*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.